التوبة - تاميلي

# பாவமன்னிப்பு

تعاوني الزلفي

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

116

هاتف: ٤٢٣٤٤٦٦ ٠١٦ ـ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠١٦

# التوبة

أعده وترجمه إلــى اللغة التاميلية:

## شعبة توعية الجاليات في الزلفي

الطبعة الثانية: ١٤٢٧/٨ هـ.


ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤٢٥هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

شعبة توعية الجاليات بالزلفي
التوبة – الزلفي، ١٤٢٥ هـ
٣٢ ص؛ ١٢ × ١٧ سم
ردمك: ٠-٦٥-٨٦٤-٩٩٦٠
(النص باللغة التاميلية)
١-الأدعية والأوراد أ. العنوان
ديوي ٩٣, ٢١٢ ٧٣٣/ ١٤٢٥

رقم الإيداع: ١٤٢٥/٧٣٣

ردمك: ٠-٦٥-٨٦٤-٩٩٦٠

الصف والإخراج: شعبة توعية الجاليات في الزلفي

# التوبة
# பாவமன்னிப்பு

ஒருவர் தீய செயல் புரிந்து அல்லது தனக்குத் தானே அநீதி இழைத்துக் கொண்டு பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால் அல்லாஹ் மன்னிப்பு வழங்கு பவனாகவும் கருணையாளனாகவும் இருப்பதை அவர் காண்பார். (4:110)

## பாவமன்னிப்பு தேடுவதன் சிறப்பு

ஒரு மனிதர் இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்) அவர்களிடம் வந்து, "நான் பாவங்கள் புரிந்து எனக்கு நானே அநீதம் இழைத்து விட்டேன். எனக்கு அறிவுரை கூறுங்கள்" எனக் கேட்டார்.

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "என்னிடமிருந்து ஐந்து விஷயங்களை ஏற்றுக் கொண்டு அவற்றைச் செய்ய முன்வந்தால் எந்தப் பாவமும் உனக்கு, எந்தத் தீங்கும் அளிக்காது."

அந்த மனிதர்: "அவைகள் யாவை?"

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "நீ அல்லாஹ்வுக்கு மாறு செய்ய நினைத்தால் அவனுடைய உணவை உண்ணாதே!"

அந்த மனிதர்: "பிறகு நான் எதை உண்பேன்? இப்புவியில் உள்ள அனைத்தும் அவனுடைய உணவே!"

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): அப்படியானால் அல்லாஹ் வின் உணவை உண்டு அவனுக்கு மாறு செய்வது சரியாகுமா?

அந்த மனிதர்: சரியாகாது. "இரண்டாவது என்ன?"

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "நீ அல்லாஹ்வுக்கு மாறு செய்ய நாடினால் அவனது பூமியில் நீ வசிக்காதே!"

அந்த மனிதர்: "இது முந்தயதை விடவும் கொடுமையானது. பிறகு நான் எங்கு தங்குவேன்? "

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "அல்லாஹ்வினுடைய உணவை உண்டு, அவனுடைய பூமியில் தங்கி இருந்து கொண்டு அவனுக்கு மாறு செய்வது முறையாகுமா? "

அந்த மனிதர்: "அது முறையல்ல. மூன்றாவது என்ன?"

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "நீ அல்லாஹ்வுக்கு மாறு செய்ய விரும்பினால் அவன் உன்னைக் காணாத இடத்திற்குச் சென்றுவிடு."

அந்த மனிதர்: "நான் எங்கு செல்வேன்? அவனோ இரகசியத்தையும் பரகசியத்தையும் அறிபவனாக இருக்கிறானே!"

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "அல்லாஹ்வினுடைய உணவை உண்டு, அவனது பூமியில் தங்கிக் கொண்டு, அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்க அவனுக்கு மாறு செய்வது முறையாகுமா? "

அந்த மனிதர்: "அதுவும் முறையல்ல. நான்காவது என்ன? "

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "உயிரைக் கைப்பற்றும் வானவர் உன் உயிரைக் கைப்பற்ற வந்தால், 'எனக்கு இன்னும் கால அவகாசம் தாருங்கள், நான் திருந்தி

நற்செயல் புரிந்து வருகிறேன்' என்று அவரிடம் சொல்லிவிடு."

அந்த மனிதர்: "அவர் என் கோரிக்கையை ஏற்க மாட்டார். எனக்கு அவகாசமும் தரமாட்டார்."

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "நீ பாவ மீட்சி பெற்று திருந்தி வாழ்வதற்காக உன்னால் உன் மரணத்தைத் தடுக்க முடியவில்லையென்றால் இறைவனுக்கு நீ எப்படித் தான் மாறு செய்கிறாய்? "

அந்த மனிதர்: "ஐந்தாவது என்ன? "

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): மறுமையில் தண்டனை தரும் வானவர்கள் உன்னை நரகத்திற்கு அழைத்துச் செல்ல வரும்போது நீ அவர்களுடன் செல்லாதே."

அந்த மனிதர்: "அவர்கள் என்னை விடமாட்டார்களே. என் கோரிக்கையை ஏற்கமாட்டார்களே. "

இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்): "அப்படியானால் நரகத்திலிருந்து விடுதலையை நீ எப்படி எதிர் பார்க்க முடியும்?"

அந்த மனிதர்: "எனக்கு இவ்வளவும் போதும். என் இறைவனிடம் நான் பாவமன்னிப்புத் தேடுகிறேன். அவனிடமே திரும்புகிறேன்."

"பாவமன்னிப்புக் கோருங்கள்" என்று தன் முஃமினான அடியார்கள் அனைவருக்கும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். "நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அனைவரும் (மன்னிப்புக் கோரி) அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள் நீங்கள் வெற்றி அடைவீர்கள்!" (24:31)

அடியார்களை அல்லாஹ் தவ்பா செய்யக்கூடியவர்கள் என்றும் தமக்குத் தாமே அநீதி இழைப்பவர்கள் என்றும் இரு வகையினராகப் பிரித்துள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்: "எவர்கள் தவ்பா செய்யவில் லையோ அவர்கள் தாம் அநியாயக்காரர்கள்."(49:11)

மனிதன் பாவமன்னிப்புக் கேட்க வேண்டிய தேவை யுடையவனாகவே பெரும்பாலும் இருக்கிறான். ஏனெனில் நபி (ஸல்) அருளியது போன்று மனிதர்கள் அனைவரும் தவறிழைப்பவர்களாகவே உள்ளனர். அப்படித் தவறிழைப் பவர்களிலே சிறந்தவர்கள் பாவமன்னிப்புத் தேடுபவர்கள் தாம். பெரும்பாலான மக்களின் தவறு என்னவெனில் பாவமான காரியங்களை அலட்சியமாகக் கருதுவது தான். அப்படிப்பட்டவர்கள் அல்லும் பகலும் அல்லாஹ்வுக்கு மாறு செய்கிறார்கள். அவர்களில் சிலர் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதை இலேசாக, சாதாரணமாகக் கருதுகின்றனர். அதன் விளைவைப் பற்றி சிந்திப்பது இல்லை.

இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஃமின் மலை அடிவாரத்தில் இருந்து கொண்டு தன் மீது அது விழுந்துவிடுமோ என்று அஞ்சுவதைப் போலவே பாவம் செய்வதை எடுத்துக் கொள்கிறான். ஆனால் தீயவனோ தனது மூக்கின் மீது பறக்கும் ஈயைத் தட்டிவிடுவது போலவே பாவம் செய்வதைக் கருதுகிறான்."

புத்திசாலியான முஃமின் சிறிய பாவம்தானே என்று பார்க்க மாட்டான். அதனால் மகத்தான இறைவனுக் கல்லவா மாறு

செய்கிறோம் என்று தான் பார்ப்பான். மனிதன் பாவத்திலிருந்து பாதுகாக்கப்படாதவனாக இருப்பதனால் தான் அல்லாஹ் தன் அடியார்களுக்கு தவ்பாவின் வாயிலைத் திறந்து விட்டிருக்கின்றான். மேலும் தவ்பா செய்யுமாறு ஏவியுமிருக்கின்றான்.

அல்லாஹ் கூறுகிறான்: "தமக்கு எதிராக வரம்பு மீறிய எனது அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். அல்லாஹ் அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பான். அவன் பெரிதும் மன்னிப்பவனும் நிகரற்ற அன்புடையோனும் ஆவான்! என்று (அல்லாஹ் கூறுவதைத்) தெரிவிப்பீராக!" (39:53)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பாவத்தைவிட்டும் மன்னிப்புக்கோரி மீண்டவன் பாவம் செய்யாதவனைப் போல் ஆவான்." (இப்னுமாஜா-4250)

அதுமட்டுமல்ல உண்மையான முறையில் பாவமன்னிப்புக் கோரும்போது தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றி விடுகின்றான்.

அல்லாஹ் கூறுகிறான்: "திருந்தி நம்பிக்கை கொண்டு, நல்லறங்கள் செய்தவரைத் தவிர! அவர்களது தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றுகிறான். அவன் மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான்!" (25:70)

முஸ்லிம்களிடம் ஏற்படக்கூடிய தவறுகளில் மிகப் பெரும் தவறு தவ்பா செய்வதைத் தள்ளிப் போடுவது தான்.

சிலர் தவறு செய்துவிட்டு தான் செய்த செயல் ஹராமானதே என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். ஆயினும் தவ்பா செய்வதைத் தள்ளிப்போடுகிறார்கள். மனிதன் தனக்கு மரணம் எப்போது வரும் என்பதை அறியமாட்டான். ஆகவே விரைந்து பாவமன்னிப்புக் கோருவது அவன் மீது கடமை யாகும். தான் அறிந்தோ அறியாமலோ செய்த எல்லா பாவங்களுக்கும் அதிக மதிகம் மன்னிப்புக் கோருவது அடியானின் கடமையாகும்.

அதுபோலவே தான் செய்த தீமைகள் எவ்வளவு பெரிய பாவங்களாக இருந்தாலும் அவை அனைத்திற்கும் விரைந்து பாவமன்னிப்புத் தேடுவது அவசியமாகும். மேலும் ஒரு விஷயத்தை அவன் விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒருவன் தன்னைக் கடவுள் என்று வாதிடுவதை விடவும் பெரும் கு∴ப்ரு-இறைநிராகரிப்பு எதுவும் இருக்க முடியாது. "அவையோரே! உங்களுக்கு என்னைத் தவிர வேறு இறைவன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று ∴பிர்அவ்ன் கூறினான். (28:38)

அப்படியிருந்தும் அல்லாஹ் தனது நபி மூஸாவை அவனிடம் அனுப்பினான். அவர் அவனை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார். அல்லாஹ்வை ஏற்கும்படியும் அவனிடம் பாவமன்னிப்புக் கோரும்படியும் அவனிடம் கூறினார். அல்லாஹ் கூறுகிறான்: "நீ ∴பிர்அவ்னிடம் செல்வீராக! அவன் வரம்பு மீறிவிட்டான். எனவே நீ பரிசுத்தமாகிட உனக்கு விருப்பம் உண்டா? நான் உனது இறைவனை நோக்கி உனக்கு

வழிகாட்டுகிறேன், அவனை நீ அஞ்சுவாய்!" (79:17-19) மூஸாவின் அழைப்பை ஏற்று அவன் பாவமன்னிப்புத் தேடியிருந்தால் அல்லாஹ் அவனை மன்னித்திருப்பான்.

இன்னொரு விஷயத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஒருவர் ஒரு பாவத்திலிருந்து தவ்பா செய்து மீண்ட பிறகு மீண்டும் அப்பாவத்தைச் செய்தால் மீண்டும் ஒரு முறை தவ்பா செய்வது அவர் மீது கடமையாகும். அதே பாவத்தையோ அல்லது வேறு பாவத்தையோ மீண்டும் மீண்டும் அவர் செய்தால் தவ்பாவையும் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் கருணை- அருளில் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது.

அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்)கூறினார்கள்: "ஆதமின் மகனே! என்னிடம் ஆதரவு வைத்து என்னை நீ அழைத்தால் நீ செய்த அனைத்துப் பாவங்களையும் மன்னித்து விடுகிறேன். நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன். ஆதமின் மகனே! நீ செய்த பாவங்கள் வானம் நிரம்ப இருந்தாலும் பிறகு என்னிடம் நீ மன்னிப்புக் கோரினால் நான் உன்னை மன்னித்துவிடுகிறேன். நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன். நீ இப்பூமி நிறம்ப பாவங்கள் செய்து எனக்கு எதையும் இணை கற்பிக்காமல் என்னை சந்தித்தால் இப்பூமி நிறைய மன்னிப்பை உனக்கு வழங்குவேன்." அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: திர்மிதி-3540

சிலர் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடு கின்றனர். காரணம் அதிகம் பாவம் செய்ததனால். அல்லது

ஒரு முறையோ பல முறையோ தவ்பா செய்துவிட்ட பிறகு மீண்டும் பாவம் செய்துவிடுவதால் அல்லாஹ் நம்மை மன்னிக்க மாட்டான் என்று கருதிக் கொண்டு தொடர்ந்து பாவங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள், தவ்பா செய்து அல்லாஹ்விடமே திரும்பிவிடுவதை விட்டு விடுகிறார்கள். இது மாபெரும் தவறாகும். ஏனென்றால் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழப்பவர்கள் காபிர்கள் தாம்.

அல்லாஹ் கூறுகிறான்: "தமக்கு எதிராக வரம்பு மீறிய எனது அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். அல்லாஹ் அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பான். அவன் பெரிதும் மன்னிப்பவன்! நிகரற்ற அன்புடையோன்! என்று (அல்லாஹ் கூறுவதைத்) தெரிவிப்பீராக!" (39:53) "அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழப்பவர்கள் அவனை நிராகரித்த மக்களே!" (12:87)

மக்களில் இப்படியும் சிலர் இருக்கின்றார்கள். அதாவது சிலரது பேச்சுக்குப் பயந்து ஒரு சில பாவங்களுக்கு தவ்பா செய்வதை அவர்கள் விட்டுவிடுகிறார்கள். அல்லது அவ்வாறு தவ்பா செய்வதனால் தாம் வாழும் சமூகத்தில் தமக்குரிய அந்தஸ்து போய்விடுமோ அல்லது தாம் செய்யும் வேலை பறிபோய்விடுமோ என்று பயந்து அதை விட்டுவிடுகிறார்கள். ஆனால் தாம் கப்ருக்குத் தனியாகத்தான் போகப்போகிறோம் பிறகு தம்முடைய இறைவன் பக்கம் எழுப்பி கொண்டு வரப்பட்டு தமது செயல்கள் குறித்து தாம் விசாரிக்கப் படுவோம் என்பதை ஏனோ அவர்கள் மறந்து விட்டார்கள்.

அப்போது அவர்களை தவ்பா செய்யவிடாது தடுத்து பாவம் செய்வதை அழகாகக் காட்டியவர்களில் யாரும் அவர்களுக்குப் பலனளிக்க மாட்டார்.

எனவே ஒருவர் அல்லாஹ்வுக்காக எனும் வாய்மையுடன் ஒரு தீமையை- தீமைக்குரிய காரணியை விட்டு விடுகிறார் எனில் அதற்குப் பகரமாக அதைவிடச் சிறந்த ஒன்றை அல்லாஹ் அவருக்கு வழங்குவான் என்பதை அவர் நினைவில் கொள்ளட்டும்.

சிலர் தொடர்ந்து பாவங்கள் செய்து கொண்டிருக்கின்றனர். அவற்றைச் செய்யக் கூடாது என்று அவர்கள் தடுக்கப்பட்டால் "அல்லாஹ் பெரிதும் மன்னிப்பவனும் கருணை மிக்கவனுமாவான்" என்று கூறிவிடுகின்றனர். இது அறியாமையாகும். மேலும் இவ்வாறுதான் ஷைத்தான் சிலரை வழிகெடுக்கிறான் என்பதில் ஐயம் இல்லை. ஏனெனில் அல்லாஹ்வின் கருணை நல்லவர்களுக்குத் தான். பாவம் செய்வதிலேயே பிடிவாதமாக இருக்கும் தீயவர்களுக்காக அல்லாஹ்வின் கருணை இல்லை. அல்லாஹ் கூறுகிறான்: "அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு அருகில் உள்ளது." (7:56)

திண்ணமாக அல்லாஹ் பெரிதும் மன்னிப்பவனாகவும் மகாக் கருணையுடையவனாகவும் இருப்பதுடன் கடுமையாகத் தண்டிக்கக்கூடியவனாகவும் உள்ளான். "நான் பெரிதும் மன்னிப்பவன், நிகரற்ற அன்புடையோன், எனது வேதனை தான் துன்புறுத்தும் வேதனை என்பதை எனது

அடியார்களுக்கு (நபியே!) நீர் அறிவித்துவிடும்!" (15:49) என்று அல்லாஹ் கூறுகிறான்.

## தவ்பாவின் நிபந்தனைகள்

உண்மையான தவ்பாவுக்கு சில நிபந்தனைகள் உள்ளன. இதனை அறிஞர்கள் திருக்குர்ஆன் வசனங்களிலிருந்தும் ஹதீஸ்களிலிருந்தும் எடுத்துள்ளனர். அவை வருமாறு:

1. உடனடியாக அந்தப் பாவத்திலிருந்து விலகுவது.
2. செய்த குற்றத்திற்காக வருந்துவது.
3. இதுபோன்ற பாவத்தை இனி ஒருபோதும் செய்ய மாட்டேன் என உறுதி கொள்வது.
4. தன்னால் உரிமையிழப்புக்கு ஆளானவர்களிடம் உரிமைகளைத் திருப்பிக் கொடுத்துவிடுவது அல்லது அதற்காக அவர்களிடம் மன்னிப்பு கேட்பது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யாரேனும் தனது சகோதரரின் மானத்திற்கோ அல்லது வேறு ஏதேனும் விஷயத்திலோ அநீதியிழைத்திருந்தால் தீனாரோ திர்ஹமோ பலன் தராத (நற்செயல்கள் அல்லது தீமைகளின் விளைவுகளை மட்டுமே எதிர் கொள்ள வேண்டியிருக்கும்) அந்த நாள் வருவதற்கு முன்னால் இன்றே அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொள்ளட்டும்." (புகாரி-2449)

'ஆயினும் கடுமையாக முயன்றும் ஒருவரால் உரிமைகளைத் திருப்பித் தர முடியவில்லையென்றால் அவர் அல்லாஹ்வின் மன்னிப்பை எதிர்பார்க்கலாம்.

## உரிமைகள்:

**அ) பொருட்கள்:** அநீதியிழைத்தவர் இவற்றை எந்த முறையிலும் அவற்றுக்கு உரியவரிடம் ஒப்படைத்தி வேண்டும். அல்லது அவரிடம் மன்னிப்பு வேண்டிக் கொள்ள வேண்டும். உரியவரை அவருக்குத் தெரியவில்லை அல்லது தேடியும் அவர் கிடைக்கவில்லை அல்லது அவரிடமிருந்து தான் அபகரித்த அளவு எவ்வளவு என்பதை மறந்துவிட்டார் எனில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவ்வளவு இருக்கலாம் என்று ஒரு அளவை நிர்ணயம் செய்து அவர் சார்பாக அதை அவர் தர்மம் செய்திட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அந்த உரிமை நிறைவேறிவிடும்.

**ஆ) உடல் சார்ந்த உரிமைகள்:** அநீதியிழைத்தவர் பாதிக்கப்பட்டவரிடம் சென்று தான் செய்த அநியாயத்திற்கு ஈட்டுத் தொகை வாங்கச் சொல்லியோ அல்லது பழிக்குப் பழிதீர்க்கச் சொல்லியோ அல்லது மன்னிப்புத் தேடியோ கணக்குத் தீர்த்துக் கொள்ளும்படி தன்னை அவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். பாதிக்கப்பட்டவர் யாரென்று தெரியாதபோது ஈட்டுத் தொகையை அவர் சார்பாக தர்மம் செய்து அவருக்காகப் பிரார்த்தனை செய்திட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் தவ்பா நிறைவேறிவிடும்.

**இ) கண்ணியம், மான மரியாதைக்குச் செய்யும் அநீதங்கள்:** இவை புறம் பேசுதல், கோள் சொல்லுதல், அவதூறு கூறுதல், நல்லுறவைக் கெடுத்தல் போன்றவை யாகும். இதுபோன்ற தீங்கை யாருக்கேனும் செய்திருந்தால்

அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். மேலும் அவர் சீர் கெடுத்தவற்றை முடிந்த வரை சீர்படுத்திட வேண்டும். அவருக்காக பிரார்த்தனையும் செய்ய வேண்டும்.

## தவ்பாவின் வகைகளில் சில

### 1. கொலை செய்தவனுடைய தவ்பா:

வேண்டுமென்றே கொலை செய்தவன் மீது மூன்று உரிமைகள் உள்ளன.

**அ. அல்லாஹ்வினுடைய உரிமை:** அம்மாபெரும் குற்றத்திற்காக வருந்தி உண்மையான முறையில் தவ்பா செய்வதன் மூலம் இதை நிறைவேற்றிவிடலாம்.

**ஆ. பாதிக்கப்பட்டவரின் வாரிசுகளின் உரிமை:** பாதிக்கப்பட்டவரின் வாரிசுகளிடம் தன்னை ஒப்படைத்து பழிக்குப் பழி வாங்கியோ அல்லது ஈட்டுத் தொகை பெற்றோ அல்லது மன்னித்தோ தங்களது உரிமையை அவர்கள் எடுத்துக் கொள்ள வழிவகுக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்களது உரிமையை நிறைவேற்றிவிடலாம்.

**இ. கொல்லப்பட்டவருடைய உரிமை:** இவ்வுலகில் இதை நிறைவேற்றிட முடியாது. கொலை செய்தவர் நல்ல முறையில் தவ்பா செய்து கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தினரிடம் தன்னை ஒப்படைத்துவிட்டால் அந்தக் குற்றத்தை அவரை விட்டும் அல்லாஹ் அகற்றிவிடுவான். மேலும் கொல்லப்பட்டவருக்கு தன் சார்பாக நன்மையைப் பகரமாக்கிவிடுவான்.

**2. வட்டி வாங்கியவனுடைய தவ்பா:**

வட்டி வாங்குவதை விட்டுவிட்டு இனிமேல் வாங்க மாட்டேன் என்று உறுதி கொள்ள வேண்டும். செய்த குற்றத்திற்காக வருந்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் இவனது தவ்பா நிறைவேறிவிடும். வட்டியாகப் பெற்ற பணத்தின் சட்டநிலை குறித்து அறிஞர்கள் கருத்துவேறுபாடு கொண்டுள்ளனர். என்றாலும் இப்னுதைமிய்யா, இப்னு ஸஅதீ, இப்னு உஸைமீன் ஆகியோரின் கருத்தர்வது: “தவ்பா செய்வதற்கு முன் அவரிடம் இருந்தால் அவர் வாங்கிய வட்டிப் பணம் அவருக்குரியது. அதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆயினும் அவனுக்கு வர வேண்டிய வட்டிப் பாக்கியை அவன் வாங்காமல் விட்டுவிட வேண்டும். இதற்கு ஆதாரம் அல்லாஹ் கூறுகிறான்:

“அல்லாஹ் வியாபாரத்தை அனுமதித்து வட்டியைத் தடை செய்துவிட்டான். தமது இறைவனிடமிருந்து அறிவுரை தமக்கு வந்த பின்னர் விலகிக்கொள்கிறாரோ அவர் முன்னர் வாங்கியது வாங்கியது தான். (என்றாலும்) அவரைப் பற்றிய முடிவு அல்லாஹ்விடம் உள்ளது.” (2:275)

## உண்மையான தவ்பா

தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால் அந்த தவ்பா அல்லாஹ்வுக்காகவே செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். மக்களுக்கு மத்தியில் அல்லது தொழிலில் தனக்கிருக்கின்ற மதிப்பு, மரியாதைக்கு இடையூறாக இருக்கும்

என்பதற்காக ஒருவன் பாவம் செய்வதை விட்டால் அவன் தவ்பா செய்தவனாக ஆக முடியாது.

தனது ஆரோக்கியத்தைப் பயந்து ஒருவன் பாவம் செய்வதை விடுவானேயானால் உதாரணமாக நோய்களை அஞ்சி விபச்சாரம் செய்வதை விடுகிறான் என்றால் அவனும் தவ்பா செய்தவனாக ஆகமுடியாது.

திருட முடியவில்லை என்பதற்காகவோ அல்லது காவலாளிக்குப் பயந்தோ இன்னும் இது போன்ற காரணங்களுக்காக திருடுவதை ஒருவன் விடுகிறானெனில் அவனும் தவ்பா செய்தவனாக ஆகமுடியாது.

தம்மிடம் உள்ள பணம் செலவழிந்து தாம் திவாலாகி விடுவோம் என்பதற்காக ஒருவன் மது அருந்துவதையும் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதையும் விட்டுவிடுகிறான் எனில் அவனும் தவ்பா செய்தவனாக ஆக முடியாது.

தனது விருப்பத்திற்கு அப்பாற்பட்ட ஒரு விஷயத்தின் குறுக்கீடால் ஒருவன் பாவம் செய்ய முடியாமல் போனால் அவனும் தவ்பா செய்தவனாக ஆகமுடியாது.

தான் செய்த பாவம் எத்துணை கெட்டது என்பதை தவ்பா செய்யக்கூடியவன் உணர வேண்டும். ஏனெனில் முறையாக தவ்பா செய்வதுடன் முன்செய்த பாவங்களை எண்ணிப்பார்க்கும் போது இன்பத்தையும் மகிழ்ச்சியையும் உணர்வானேயானால் அல்லது எதிர்காலத்தில் அதுபோன்ற பாவங்களைத் திரும்பவும் செய்வதற்கு ஆசைப்படுவானேயானால் அது சரியான தவ்பாவாக இருக்க முடியாது.

அதுபோல போதைப் பொருட்கள், மன மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுச் சாதனங்கள், ஹராமான உருவப்படங்கள், திரைப்படங்கள் போன்ற பொருட்களை விட்டும் முழுமையாக விடுபட வேண்டும். அதுபோல பாவம் புரிவதற்கு உடந்தையாய் இருக்கும் தீய நண்பர்களை விட்டும் விலகிட வேண்டும். மறுமையில் அப்படிப்பட்டவர்கள் ஒருவரையொருவர் சபிக்கத் தான் போகிறார்கள். இதனால்தான், அவர்களை நேர்வழியின் பால் அழைப்பதற்கும் சீர் திருத்தம் செய்வதற்கும் இயல வில்லையெனில் அவர்களை விட்டும் விலகிவிடுவது தவ்பா செய்பவனுக்கு அவசியமாகும்.

இவ்வாறு தவ்பா செய்யும் மனிதனுக்கு மீண்டும் தீய நண்பர்களுடன் தொடர்பு வைப்பதை ஷைத்தான் அழகாக்கிக் காட்டுவான். அவர்களிடம் தொடர்பு வைத்திருந்தால் நேர்வழியின் பக்கம் அவர்களை அழைக்க முடியும் என்று ஊசலாட்டம் ஏற்படுத்துவான். ஆனால் அத்தீய நண்பர்களிடம் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த இயலாத அளவுக்கு அந்த மனிதன் பலவீனமாக இருப்பா னேயானால் அந்தத் தொடர்பே மீண்டும் அந்தப் பாவங்களை அவன் செய்வதற்குக் காரணமாகிவிடும்.

ஆகவே தவ்பா செய்தவன் தீய நண்பர்களுக்குப் பதிலாக நன்மைக்கு உடந்தையாயிருக்கக்கூடிய நன்மை செய்யத் தூண்டக்கூடிய நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகும்.

## பாவ மீட்சிக்கு உதவும் விஷயங்கள்

**1. அல்லாஹ்வுக்காகவே என்ற தூய எண்ணம்:** இது தான் பாவங்களிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளில் மிகவும் பலனுள்ளது! ஒரு அடியான் அல்லாஹ்வுக்காக எனும் தூய மனத்துடன் உண்மையான முறையில் தவ்பா செய்தால் பாவங்களிலிருந்து விலகுவதற்கு அவனுக்கு அல்லாஹ் உதவி செய்வான், தவ்பா செய்வதற்குத் தடையாக உள்ளதை அவனை விட்டும் திருப்பிவிடுவான்.

**2. மனதோடு போராடுதல்:** பாவங்களிலிருந்து விலகு வதற்காக ஒரு மனிதன் தன் மனத்தோடு போராடினால் அல்லாஹ் அவனுக்கு உதவி செய்வான். அல்லாஹ் கூறுகிறான்: "நம் விஷயத்தில் உழைப்போருக்கு நமது வழிகளைக் காட்டுவோம். நன்மை செய்வோருடன் அல்லாஹ் இருக்கிறான்." (29:69)

**3. மறுமையை எண்ணிப்பார்த்தல்:** ஒரு மனிதன் இவ்வுலகின் குறுகிய ஆயுளையும் விரைவில் அழியும் தன்மை யையும் நினைத்துப் பார்த்தால், அடிபணிந்து வாழ்ந்த நல்லடியார்களுக்கு மறுமையில் கிடைக்கும் அருட்பாக்கியங் களையும் பாவிகளுக்குரிய கடுமையான தண்டனையையும் எண்ணிப் பார்த்தால் நிச்சயமாக அது பாவங்களில் விழாமல் அவனைத் தடுக்கும் பெரிய காரணிகளில் ஒன்றாக அமையும்.

**4. பயனுள்ள காரியங்களில் ஈடுபடுவது, தனிமை யையும் ஓய்வையும் தவிர்ந்து கொள்வது:** ஓய்வுதான் பாவங்களில் வீழ்வதற்குரிய மிக முக்கியமான காரணமாகும். எனவே ஒரு

மனிதன் தனது உலகத்துக்கும் மார்க்கத்துக்கும் பயனுள்ள காரியத்தில் ஈடுபடுவானேயானால் தீமை செய்வதற்கான கால அவகாசம் இல்லாமல் போய்விடும்.

**5. பாவம் செய்யத் தூண்டக்கூடிய, பாவத்தை நினைவூட்டக்கூடிய காரியங்களை விட்டும் தூரமாகுதல்:** பாவம் செய்வதற்கான காரண காரியங்களைத் தூண்டக்கூடிய அனைத்தையும் விட்டும் தூரமாகிட வேண்டும். அதுபோல சினிமா பார்ப்பது, ஆபாசமான பாடல்கள், புத்தகங்கள், பத்திரிக்கைகள் ஆகியவற்றைப் படிப்பது போன்ற பாலுணர்வைத் தூண்டக்கூடிய அனைத்தையும் விட்டுத் தூர விலகிட வேண்டும்.

**6. நல்லவர்களுடன் பழகுதல் தீயவர்களை விட்டும் விலகுதல்:** நல்லவர்களுடன் சேர்ந்திருப்பது நன்மை செய்வதற்குத் துணையாக இருப்பதோடு அவர்களைப் பின்பற்றுவதற்கு ஒரு மனிதனை ஆர்வமூட்டும். தீமை செய்வதை விட்டும் தடுக்கும்.

**7. துஆ:** துஆதான் மிகவும் பயனுள்ள மருந்தாகும். துஆ முஃமினுடைய ஆயுதமாகும். அது நாட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான வழிமுறைகளில் மிகப் பலமான வழிமுறையாகும். அல்லாஹ் கூறுகிறான்:

"என்னை அழையுங்கள் உங்களுக்குப் பதிலளிக்கிறேன் என்று உங்கள் இறைவன் கூறுகிறான்." (40:60)

"உங்கள் இறைவனிடம் பணிந்தும் இரகசியமாகவும் இறைஞ்சுங்கள்." (7:55)

மேலும் கூறுகிறான்: "(நபியே!) என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால் 'நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்திப்பவன் என்னைப் பிரார்த்திக்கும் போது பிரார்த்தனைக்குப் பதில் அளிக்கிறேன். எனவே அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்யட்டும். என்னையே நம்பட்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று கூறுவீராக!)." (2:186)

## பாவங்களை அழிக்கக்கூடியவை

அல்லாஹ் தனது அடியார்களுக்கு கடமையாக்கியிருக்கின்ற வணக்க வழிபாடுகளில் சில, அவர்கள் செய்யும் சிறுபாவங்களை அழித்துவிடக் கூடியவையாக இருப்பது அல்லாஹ் அவர்களுக்கு அருளிய அருளாகும். அவற்றுள் சில:

**1. ஐவேளைத் தொழுகைகள்:** "உங்களில் ஒருவரது வீட்டு வாசலில் ஒரு ஆறு ஓடிக்கொண்டிருந்தால் ஒவ்வொரு நாளும் அதில் அவர் ஐந்து தடவை குளித்தால் அவர் உடம்பில் அழுக்கு ஏதும் எஞ்சியிருக்குமா?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'அல்லாஹ்வின் தூதரே! இருக்காது' என்று தோழர்கள் கூறினார்கள். "அதுபோலத்தான் ஐவேளை தொழுகைகளும்! அதன் மூலம் அல்லாஹ் தவறுகளையும் பாவங்களையும் அழித்துவிடுகின்றான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி-528, முஸ்லிம்-667)

**2. ஜும்ஆத் தொழுகை:** "ஒருவர் உளூ செய்து அதையும் அழகிய முறையில் செய்து பிறகு ஜும்ஆவுக்கு வந்து மௌனமாக இருந்து குத்பா உரையை செவி தாழ்த்திக்

கேட்டால் அந்த ஜும்ஆவுக்கும் மறு ஜும்ஆவுக்கும் இடைப் பட்ட பாவங்களும் மேலும் மூன்று தினங்களுக்குமிடையில் உள்ள பாவங்களும் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன." (முஸ்லிம்-857)

**3. ரமலான் நோன்பு:** "நம்பிக்கையுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் யார் ரமலானில் நோன்பு நோற்றாரோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன" என்று நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி-38, முஸ்லிம்760)

**4. ஹஜ்:** "பாலுறவு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் தீமை செய்யாமலும் யாரேனும் ஹஜ் செய்தால் அவர் அன்று பிறந்த பாலகன் போன்று பாவமற்றவராக வீடு திரும்புகிறார்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி-1521, முஸ்லிம்-1350)

**5. அரஃபா நோன்பு:** "அரஃபா நாளில் நோன்பு நோற்பது சென்றுபோன, இனி வரக்கூடிய வருடங்களின் பாவங் களுக்குப் பரிகாரமாக அமைகின்றது" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், முஸ்லிம்-1162)

**6. துன்பங்கள், நோய்கள்:** நபி (ஸல்) கூறினார்கள்: "ஒரு முஸ்லிமுக்கு நோய், களைப்பு, கவலை, தொல்லை, துக்கம், துயரம் மற்றும் முள் குத்தல் போன்ற துன்பங்கள் ஏற்பட்டால் அவற்றை அவனுடைய தவறுகளுக்கு பிராயச்சித் தமாக அல்லாஹ் ஆக்கிவிடுகின்றான். (புகாரி-5642)

"யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவனைச் சோதிப்பான்" என்பதும் நபிமொழி. (புகாரி-71)

**7. பாவமன்னிப்புத் தேடுதல்:** எவற்றையெல்லாம் அல்லாஹ் பாவங்களுக்குப் பரிகாரமாக ஆக்கியுள்ளானோ அவற்றில் மகத்தானது பாவமன்னிப்பு தேடுதலாகும். அல்லாஹ் கூறுகிறான்: "அவர்கள் பாவமன்னிப்புத் தேடிக் கொண்டிருக்கும்போதும் அவர்களை அல்லாஹ் தண்டிப் பவனாக இல்லை." (8:33)

'யாருடைய பதிவேட்டில் அதிக அளவு பாவமன்னிப்புத் தேடுதல் இருக்கிறதோ அவருக்கு நல்வாழ்த்துக்கள்!' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னுமாஜா-3818)

## கேள்வி பதில்

? நான் தவ்பா செய்ய விரும்புகிறேன். ஆனாலும் என்னுடைய பாவங்கள் மிக அதிகமாக உள்ளன. கடந்த வருடங்கள் முழுவதும் நான் செய்த பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னிப்பானா என்பது எனக்குத் தெரியாதே?

! அல்லாஹ் கூறுகிறான்: "தமக்கு எதிராக வரம்பு மீறிய எனது அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். அல்லாஹ் அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பான். அவன் பெரிதும் மன்னிப் பவனும் நிகரற்ற அன்புடையோனும் ஆவான்! என்று (அல்லாஹ் கூறுவதைத்) தெரிவிப்பீராக!" (39:53)

ஹதீஸ் குத்ஸியில் அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஆதமின் மகனே! என்னிடம் ஆதரவு வைத்து என்னை நீ அழைத்தால் நீ செய்த அனைத்துப்

பாவங்களையும் மன்னித்துவிடுகிறேன். நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன். ஆதமின் மகனே! நீ செய்த பாவங்கள் வானம் நிரம்ப இருந்தாலும் பிறகு என்னிடம் நீ மன்னிப்புக் கோரினால் நான் உன்னை மன்னித்து விடுகிறேன். நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன். நீ இப்பூமி நிரம்ப பாவங்கள் செய்து எனக்கு எதையும் இணை கற்பிக்காமல் என்னை சந்தித்தால் இப்பூமி நிறைய மன்னிப்பை உனக்கு வழங்குவேன்." அறிவிப்பவர்: அனஸ் (ரலி), (திர்மிதி-3540)

இன்னும் சொல்வதானால் தனது அடியார்களுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கக்கூடிய அருள் இதை விடவும் அதிகமானதே! யார் தூய்மையான முறையில் தவ்பா செய்கிறாரோ அவர் முன் செய்த தவறுகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றிவிடுகின்றான். "திருந்தி நம்பிக்கை கொண்டு, நல்லறங்கள் செய்தவரைத் தவிர! அவர்களது தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றுகிறான். அவன் மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான்!" (25:70) என்று அல்லாஹ் கூறுவதைப்போல.

? நான் தவ்பா செய்ய விரும்புகிறேன். ஆனால் எனது தீய நண்பகள் என்னை விடுவதாக இல்லை. நான் பலவீனத்தை உணர்கிறேன். நான் என்ன செய்வது?

! இப்படிப்பட்டவர்களுக்கு பொறுமையும் தவ்பாவில் உறுதியும் வேண்டும். வாய்மையான முறையில் பாவமன்னிப்புத் தேடுபவர் மற்றவர்களை விட்டும் தனியாகப் பிரிந்து

விடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சோதனையாகும் இது. ஆனாலும் அத்தீய நண்பர்களுக்குக் கட்டுப்படுவதை விட்டும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: "(நபியே) பொறுமையாக இருப்பீராக! அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. உறுதியாக நம்பாதோர் உம்மை இலேசாகக் கருதிட வேண்டாம்." (30:60)

மேலும் மனிதன் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது தான் மீண்டும் அவர்களிடம் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதற்காக அந்தத் தீய நண்பர்கள் பல்வேறு வழிமுறைகளை மேற்கொள்ளத் தான் செய்வர். ஆனால் தனது வாய்மையையும் சத்தியத்தின் மீதுள்ள தனது பிடிப் பையும் அவர்கள் அறிந்து கொண்டால் விட்டுவிடுவார்கள்.

? நான் தவ்பா செய்ய விரும்புகிறேன். என்னுடைய பழைய நண்பர்கள் எனது கேவலங்களை மக்களுக்கு மத்தியில் பகிரங்கப்படுத்திவிடுவதாக என்னை மிரட்டுகிறார்கள். அவர் களிடம் என்னுடைய பிலிம்களும் வேறு சில ஆதாரங்களும் இருக்கின்றன. அது பகிரங்கப்பட்டுவிடுமோ என நான் அஞ்சுகிறேன். நான் என்ன செய்வது?

! முதலில் ஷைத்தானின் நேசர்களுடன் போராடுங்கள். ஷைத்தானின் சூழ்ச்சி பலவீனமானது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு நீங்கள் பணிந்து விட்டால் உங்களுக்கு எதிராக மேலும் பல ஆதாரங்களைத் திரட்டவே முனைவர். உங்களைப் பொருத்த வரை நீங்கள் அவர்களை

எதிர்த்து நிற்கும்போதும் தோற்றுத் தான் போவீர்கள். அவர்களுக்குப் பணிந்து செல்லும்போதும் தோற்றுத்தான் போவீர்கள். என்றாலும் அல்லாஹ்வின் மீது தவக்குல்-நம்பிக்கை வையுங்கள். எனக்கு அல்லாஹ் போதுமானவன் அவனே சிறந்த பாதுகாவலன் என்று கூறுங்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் ஒரு கூட்டத்தாரைப் பயந்தால் اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُ بِكَ مِنْ شُرُوْرِهِمْ **“அல்லாஹும்ம இன்னா நஜ்அலுக ஃபீ நுஹூரிஹிம் வநவூது பிக மின் ஷுரூரிஹிம்”** என்று கூறுவார்கள். (அஹ்மத், அபூதாவூத்-1537) **(பொருள்:** இறைவா! அவர்களுக்கு எதிரில் உன்னை ஆக்குகிறோம். அவர்களின் தீமைகளை விட்டு உன்னைக் கொண்டு பாதுகாப்பு தேடுகிறோம்.)

சூழ்நிலை மிகக் கடுமையானது என்பது சரிதான். ஆனாலும் இறையச்சம் உள்ளவர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான். அவர்களை அவன் கைவிட மாட்டான். இதோ இந்த வரலாற்று நிகழ்ச்சியை படித்துப் பாருங்கள். இறையச்சம் உள்ள்ளவர்களுக்கு அல்லாஹ்வின் உதவி கிடைக்கும் என்பதற்கு இது மிகச் சிறந்த சான்றாக இருக்கின்றது.

அதாவது மர்ஸத் பின் அபீமர்ஸத் என்று ஒரு நபித்தோழர் இருந்தார். அவர் முஸ்லிம்களில் (ஹிஜ்ரத் செல்ல முடியாமல் உள்ள) பல வீனர்களை மக்காவிலிருந்து மதீனாவுக்கு (இரகசியமாக) அழைத்துச் செல்பவராக இருந்தார். அங்கு

மக்காவில் அனாக் என்ற ஒரு பெண் இருந்தாள். அவள் விபச்சாரி. முன்னொரு காலத்தில் மர்ஸத் என்ற நபித் தோழரின் தோழியாக இருந்தாள். ஒரு தடவை மர்ஸத் ஒரு மனிதரிடம் அவரை மதீனாவுக்கு அழைத்துச் செல்வதாக வாக்களித் திருந்தார். பிறகு நடந்த சம்பவத்தை மர்ஸதே கூறுகிறார்:

நான் அம்மனிதரை அழைத்துச் செல்வதற்காக வந்தேன். பௌர்ணமி இரவில் அங்கு ஒரு சுவரின் நிழலுக்கு வந்தேன். அங்கு வந்த அனாக் என்னைப் பார்த்துவிட்டாள். அவள் நெருங்கி வந்தபோது நான் யார் என்பதை அறிந்து கொண்டாள். உடனே 'வாரும்! நாம் இருவரும் இந்த இரவைக் கழிப்போம்' என்று கூறினாள். நான் கூறினேன்: அனாகே! விபச்சாரத்தை அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான். அதற்கவள், 'எனது கூட்டத்தாரே! இதோ இந்த மனிதர் உங்கள் கைதிகளை (இரகசியமாக) அழைத்துச் செல்கிறார்' என்று சத்தம் போட்டாள். உடனே எட்டுப்பேர் என்னைப் பின் தொடர்ந்தனர். நான் ஒரு குகைக்குச் சென்று அதில் நுழைந்து கொண்டேன்.

அவர்கள் வந்து குகைக்கருகே என் தலைக்கு மேல் பகுதியில் நின்று கொண்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு என்னை மறைத்து விட்டான். பிறகு அவர்கள் திரும்பிச் சென்றார்கள். அதன் பிறகு நான் (மதீனாவுக்கு அழைத்துச் செல்வதாக இருந்த) அந்த நண்பரிடம் சென்று அவரை மதீனாவுக்கு அழைத்துச் சென்றேன். திர்மிதி-3177, நஸயீ-3176

இவ்வாறே அல்லாஹ் முஃமின்களையும் தவ்பா செய்பவர் களையும் பாதுகாக்கின்றான். இப்போது உங்கள் பிரச்சனைக்கு வருவோம். நீங்கள் அஞ்சக்கூடிய விஷயம் வெளிப்பட்டுவிட்டால் மேலும் அவ்விஷயம் இன்னும் தெளி வடைய வேண்டியிருக்கிறது என்றால் அப்போது உங்கள் நிலைப்பாட்டை மற்றவர்களுக்கு நீங்கள் தெளிவுபடுத்திட வேண்டும். ஆம்! நான் தவறு செய்தவன்தான். ஆயினும் நான் இப்போது அல்லாஹ்விடம் தவ்பா செய்துவிட்டேன் என்று நீங்கள் கூறிவிட வேண்டும். மேலும் ஒரு விஷயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது உண்மையான கேவலம் என்பது மறுமையில் அல்லாஹ்வின் முன்னிலையிலும் மலக்குமார்கள், ஜின்கள், மனிதர்கள் ஆகிய அனைத்துப் படைப்பினங்கள் முன்னிலையிலும் ஏற்படப்போகும் கேவலம் தான்.

? நான் ஒரு பாவம் செய்துவிட்டு அதிலிருந்து (தவ்பா செய்து) மீண்டுவிடுகின்றேன். எனது மனோஇச்சை என்னை மிகைத்துவிடுகின்றது. மீண்டும் அதே பாவத்தைச் செய்து விடுகின்றேன். இப்போது நான் செய்த முதல் தவ்பா வீணாகி விடுமா? மேலும் முதலில் செய்தபாவத்தின் குற்றமும் பிறகு செய்த பாவத்தின் குற்றமும் என் மீது படிந்திருக்குமா?

! ஒருவன் ஒரு பாவத்திலிருந்து தவ்பா செய்து மீண்டு விட்டால் அல்லாஹ் அவனது தவ்பாவை ஏற்றுக்கொள் கிறான். மீண்டும் அதே பாவத்தைச் செய்தால் அவன் புதிதாக ஒரு பாவத்தைச் செய்தவன் போலாகிவிடுகின்றான். அதை

விட்டும் அவன் தவ்பா செய்வது கடமையாகிவிடுகின்றது. முதலில் அவன் செய்த தவ்பா நிறை வேறிவிடும்.

? நான் ஒரு பாவத்தை விட்டும் தவ்பா செய்து விட்டேன். அதே நேரத்தில் வேறொரு பாவத்தில் பிடிவாதமாக இருக்கின்றேன். நான் செய்த அந்த தவ்பா நிறைவேறிவிடுமா?

! ஆம்! நீங்கள் செய்த தவ்பா நிறைவேறிவிடும். ஆனால் நீங்கள் பிடிவாதமாக இருக்கின்ற பாவம் (நீங்கள் முதலில் செய்த) அதே வகையைச் சார்ந்ததாக இல்லாதிருக்க வேண்டும். உதாரணமாக ஒருவன் வட்டியிலிருந்து தவ்பா செய்துவிட்டான் அதே நேரத்தில் மது அருந்துவதிலிருந்து தவ்பா செய்யவில்லை. இப்போது வட்டியிலிருந்து அவன் செய்த தவ்பா நிறைவேறிவிடுகின்றது.

இதற்கு மாற்றமாக ஒருவன் மது அருந்துவதிலிருந்து தவ்பா செய்துவிட்டான் அதே நேரத்தில் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதை விட்டும் தவ்பா செய்யவில்லை. அல்லது ஒருவன் ஒரு பெண்ணுடன் விபச்சாரம் செய்வதிலிருந்து தவ்பா செய்துவிட்டான். அதே நேரத்தில் வேறொரு பெண்ணுடன் விபச்சாரத்தைத் தொடர்கிறான் இவ்விரண்டு நிலையிலும் அவன் செய்த தவ்பா நிறைவேறாது.

? நான் கடந்த காலங்களில் தொழுகை, நோன்பு, ஸகாத் போன்ற சில கடமைகளை விட்டு விட்டேன். இந்நிலையில் நான் என்ன செய்வது?

! தொழுகையைப் பொருத்தவரை அதைக் களா செய்வது கடமை இல்லை. ஆயினும் அதற்குப் பதிலாக தூய்மையான

முறையில் தவ்பா செய்துவிடுங்கள். இனி தொழுகைகளை முறையாகப் பேணிக்கொள்ளுங்கள். மேலும் அதிகமதிகம் பாவமன்னிப்புத் தேடுங்கள் அல்லாஹ் அதை மன்னித்து விடுவான்.

நோன்பை நிறைவேற்றாதவரின் நிலைமை என்னவெனில் அவர் நோன்பை விட்ட நேரத்தில் முஸ்லிமாக இருந்தால் அவர் விடுபட்ட நோன்பை களாச் செய்ய வேண்டும். அத்துடன் அவர் விட்ட ஒவ்வொரு நாளைக்கும் ஒரு ஏழைக்கு உணவளிக்க வேண்டும்.

ஸகாத்தைப் பொருத்தமட்டில் அதைக் கொடுத்துவிடுவது கடமையாகும்.

? சிலருடைய பொருட்களை நான் திருடிவிட்டேன். பிறகு நான் அல்லாஹ்விடம் தவ்பா செய்துவிட்டேன். திருடிய பொருளைத் திருப்பிக் கொடுப்பதற்கு அவர்களின் முகவரி எனக்குத் தெரியாது. நான் என்ன செய்வது?

! முடிந்தவரை அவர்களைத் தேடுவது உங்கள் மீது கடமையாகும். அவர்கள் கிடைத்து விட்டால் நீங்கள் எடுத்ததை அவர்களிடம் கொடுத்து விடுங்கள். பொருளுக் குரியவர் இறந்துவிட்டால் அப்பொருளை அவர்களின் வாரிசு களிடம் ஒப்படைத்து விடுங்கள். ஆனால் அவர்களைச் சரியான முறையில் தேடியும் கிடைக்காத பட்சத்தில் அவர்கள் சார்பாக- அவர்களுக்காக அப்பொருளை தர்மம் செய்து விடுங்கள் அவர்கள் இறைமறுப்பாளர்களாக இருந்தாலும் சரியே! ஏனெனில் அல்லாஹ் அவர்களுக்கு இவ்வுலகில்

வழங்குகிறான். மறுவுலகில் தான் அவர்களுக்கு வழங்கு வதில்லை.

? நான் விபச்சாரம் செய்துவிட்டேன். நான் தவ்பா செய்வது எப்படி? அவள் கருவுற்றிருந்தால் அக்குழந்தை என்னுடையதாகுமா?

! பெண்ணுடைய சம்மதத்துடன் விபச்சாரம் செய்தி ருந்தால் தவ்பா செய்வதைத் தவிர உங்கள் மீது வேறு கடமை இல்லை. குழந்தை உங்களைச் சேராது. அக்குழந்தைக்கு செலவு செய்வதும் உங்கள் மீது கடமை கிடையாது. ஏனெனில் அக்குழந்தை விபச்சாரத்தில் பிறந்த குழந்தையாகும். இதுபோன்ற குழந்தை அதன் தாயை இணைத்தே சொல்லப்படும். இப்பிரச்சனையை மறைப் பதற்காக தவ்பா செய்தவன் அப்பெண்ணை மண முடித்துக் கொள்வது கூடாது. அதே நேரத்தில் அந்த ஆணும் பெண்ணும் தூய்மையான முறையில் தவ்பா செய்து விட்டால், அவளுடைய வயிற்றில் கரு இல்லை என்று தெளிவாகிவிட்ட பிறகு அவளை திருமணம் முடித்துக்கொள்வது குற்றமில்லை.

ஆனால் அப்பெண்ணை நிர்பந்தப்படுத்தி வலுக்கட்டா யமாக விபச்சாரம் செய்திருந்தால் இந்த நிலையில் அவளுக்கு அவள் போன்ற பெண்ணுக்குக் கொடுக்கப்படக்கூடிய மஹரைக் கொடுத்துவிடுவது அந்த ஆணின் மீது கடமை யாகும். இது அவளுக்கு அவன் ஏற்படுத்திய தீங்கிற்குப் பகரமாகும். மேலும் அவன் தூய்மையான முறையில் தவ்பா செய்வதும் கடமையாகும். அத்துடன் விவகாரம் அரசாங்

கத்திடம் சென்றுவிட்டால் அவன் மீது விபச்சாரத்திற்குரிய தண்டனையும் நிறைவேற்றப்பட வேண்டும்.

? நான் நல்லொழுக்கமுள்ள ஒரு ஆணை மணந்து கொண்டிருக்கிறேன். திருமணத்திற்கு முன் அல்லாஹ் விரும்பாத சில காரியங்களைச் செய்திருக்கிறேன். என்ன செய்வது?

! உண்மையான முறையில் அல்லாஹ்விடம் தவ்பா செய்துவிடுங்கள். நீங்கள் செய்தவற்றை உங்கள் கணவரிடம் தெரியப்படுத்த வேண்டாம்.

? ஓரினச் சேர்க்கையிலிருந்து தவ்பா செய்பவர் மீது கடமையாகும் விஷயம் என்ன?

! இருவரும் சரியான முறையில் தவ்பா செய்வது கடமை யாகும். ஏனெனில் லூத் (அலை) அவர்களின் சமுதாயத்திற்கு- அவர்கள் செய்த மோசமான குற்றத்திற்காக பல வகையான வேதனைகளை அல்லாஹ் இறக்கியதுபோல வேறு ஏதேனும் ஒரு சமுதாயதிற்கு அல்லாஹ் இறக்கியிருக்கிறானா என்பது அறியப்படவில்லை. லூத் (அலை) அவர்களின் சமுதாயத்திற்கு அல்லாஹ் கொடுத்த வேதனை:

1- அவர்களின் பார்வைகளைப் பறித்தான். அதனால் அவர்கள் குருடர்களானார்கள்.
2- அவர்கள் மீது பயங்கரமானதொரு சப்தத்தை அனுப்பினான்.
3- அவர்களின் ஊர்களைத் தலைகீழாகப் புரட்டினான்.

4- அவர்கள் மீது சுடப்பட்ட கற்களை தொடர்ந்து பொழியச் செய்து அனைவரையும் அழித்தான்.

இதனால்தான் நபி (ஸல்) கூறினார்கள்: லூத்(அலை) அவர்களின் சமுதாயத்தினர் செய்த செயலை யாரேனும் செய்யக் கண்டால் செய்தவனையும் செய்யப்பட்டவனையும் கொன்றுவிடுங்கள். (இப்னுமாஜா-2561) எனவே இதுபோன்ற செயலைச் செய்தவர் தூய்மையான முறையில் தவ்பா செய்வதும் அல்லாஹ்விடம் அதிகமதிகம் பாவமன்னிப்புத் தேடுவதும் அவசியமாகும்.

முடிவாக அன்புச் சகோதரர்களே! ஒரு தாய் தன் குழந்தை மீது காட்டும் கருணையை விடவும் அல்லாஹ் தன்னுடைய அடியார்கள் மீது மிகவும் கருணையுடையவனாக இருக்கின்றான். யார் உண்மையான முறையில் தவ்பா செய்கின்றாரோ அவருடைய தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான். தவ்பாவின் வாயில் அடைக்கப்படுவதில்லை திறந்தே இருக்கின்றது.